அதனால் குழைந்து குழைந்து போவது என்பது அர்த்தம் அல்ல. இருவரும் எங்களுடைய தலைவர்கள். சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் மூப்பனார் அவர்களும் எங்களுடைய தலைவர். வாழப்பாடி ராமமூர்த்தியும் எங்களுடைய தலைவர். அதற்காக சற்று அதிகமான முறையில் விரசமாக இருக்கிறது, ஆகவே ஹேஷ்யம் போடவேண்டியதுதான். இதுபோல் 'ரீல் ரெங்கப்பா' என்ற செய்தி வரவேண்டியதுதான். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சற்று விரசமாக இருக்கிறது. ஆகவே இந்த ஜூனியர் விகடன் பத்திரிகையின் கவனத்திற்கு தயவு செய்து பேரவைத் தலைவர் அவர்கள் கொண்டுபோய் ''ரீல் ரெங்கப்பா இதெல்லாம் சிங்காரத்திடம் சொல்லாதப்பா'' என்று சொல்லி இதற்கு ஒரு நோட்டீஸ் அனுப்பியாவது இதுபோன்ற விரசமான பகுதியை வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வந்தது பற்றி மகிழ்ச்சி. நம்முடைய இதழ்களுக்கு பொதுவாகவே நகைச்சுவை, கற்பனைச் செய்திகள் வெளியிடுவதற்குச் சில உரிமைகள் இருக்கின்றன, என்றாலும் திரு. சிங்காரம் அவர்கள் மூட்டைப்பூச்சி, கரப்பான் பூச்சியோடு இவ்வளவு தொடர்பு வைத்திருக்கிறார் என்ற அளவிற்கு அது சொல்லப்பட்டிருப்பது அவரை மிகவும் பாதித்து இருப்பதனால் இனிமேல் இதுபோன்ற செய்திகளை உறுப்பினர்களைக் கொச்சைப்படுத்துகின்ற அளவுக்கு, மதிப்பிற்குரிய திரு. மூப்பனார் போன்ற மதிப்பிற்குரிய தலைவரைக் கொச்சைப்படுத்துகின்ற அளவிற்குச் செய்திகளை வெளியிடாமல் வேறு வகையான நல்ல கற்பனைகளை, தரமான கற்பனைகளை வெளியிட்டு, பத்திரிகை உலகம் இந்தத் தமிழ் இனத்திற்கு, மக்களாட்சி மாண்புக்குத் துணை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளோடு இந்தப் பிரச்சினை முடிக்கப்படுகிறது.

3. விதி 109-ன் கீழ் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்

4-5-1990 ஆம் நாளன்று திரு. குமரி அனந்தன் தெரிவித்த கருத்து பற்றி அறநிலையத்துறை அமைச்சரின் தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 109-ன் கீழ் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிக்கிறார். (குறுக்கீடு) ஏற்கனவே எல்லா விளக்கமும் சொல்லியாகிவிட்டது. இனிமேல் அதில் விவாதத்திற்கு இடமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: இரண்டு நாட்களுக்குப் பின்னாலே எடுத்துக்கொள்ளலாம் என்று அன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இப்போது

உங்களுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டு அவரை அழையுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லி நிச்சயமாக குறுக்கே நிற்கப் போவதில்லை. அதேபோல் விதி 109-க்கு விளக்கமும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஏற்கனவே அளித்து ரொம்ப நேரம் ஆகிவிட்டது. நேரத்தை எல்லாம் வீணாக்கக்கூடாது. ஏற்கனவே ஒருவர் பேசி, விடை எல்லாம் சொல்லியாகிவிட்டது. விதி 109-ன் கீழ் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார். அவர் தன்னிலை விளக்கத்தை அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 4—5—1990 வெள்ளிக்கிழமை அன்று காவல்துறை மானிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மதிப்பிற்குரிய குமரி அனந்தன் அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவல்களைத் தந்து என்மீது வீண் பழி சுமத்தி பேசியதற்காக சட்டப் பேரவை விதி 109-ன் கீழ், தலைவர் அவர்களே, தங்களிடத்திலே ஏற்கனவே எழுதித் தந்து தங்களது ஒப்புதலையும் அனுமதியையும் பெற்று, கீழ்க்கண்ட விளக்கம் தர விரும்புகிறேன்:

10-30 மணி

நெல்லை மாவட்டத்தில் எனது சொந்த ஊரான தண்டப்பத்தில் பெரும் தலைவர் காமராஜர் அவர்களால் 22—2—1955-ல் அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டு தொண்டர் ஆறுமுகையனார் ஞாபகார்த்த வாசக சாலையை சிதம்பரநாடார் என்பவர் கட்டித் தந்ததாகவும், அந்த வாசக சாலை அருகே நான் கால்யாண மண்டபம் கட்டவேண்டும் என்று விரும்பி அந்தக் கல்யாண மண்டபத்தை வாசக சாலை மறைக்கிறது என்று சொல்லி வாசக சாலையை இடித்து விட்டதாகவும், நான் செல்வாக்குப் பெற்ற, சக்தி வாய்ந்த பெரிய மனிதர் என்ற காரணத்தால் போலீசும் செயல் ஆற்றாமல் நின்றுவிட்டது என்பதாகவும், ஆகவே, நான் கல்யாண மண்டபம் கட்டுவதற்காகப் பெருந்தலைவர் காமராஜரின் கையால் அடிக்கல் நாட்டப்பட்ட, பொதுமக்களுக்கு பயன்படுத்தப்பட்ட, ஒரு தியாகிக்காகக் கட்டப்பட்ட, அந்த வாசக சாலையை இடிக்க வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பி திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலே பதிவு ஆகியிருக்கிறது.

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள எனது சொந்த ஊரான தண்டப்பத்தில் தொண்டர் ஆறுமுகநாயனார் ஞாபகார்த்த வாசக சாலையை சிதம்பர நாடார் என்பவர் கட்டித் தந்தார் என்பது

ஆதாரமற்ற முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவல் ஆகும். நடந்தது என்னவென்றால் அந்த ஊரைச் சேர்ந்த வசதிபடைத்தவர்களிடமிருந்து ரூபாய் 25, 50, 100 என்று வசூல் செய்து வாசகசாலை கட்டி முடிக்கப்பட்டது. சிதம்பர நாடார் என்பவரும் ரூபாய் 100 தந்தார். மொத்தச் செலவு ரூபாய் ஆயிரத்திற்கு மேல் ஆனது. சிதம்பர நாடார் மொத்தமாக ரூபாய் ஆயிரம் தந்துவிட்டால் அவர் பெயர் பொறித்த கருங்கல் பலகையை அந்தக் கட்டிடத்தில் பதிக்க வாசகசாலை சங்கம் சம்மதித்தது. ஆனால் அவர் அந்தத் தொகையைக் கொடுக்கவில்லை. ஆகவே அவர் தயாரித்து வைத்து இருந்த பெயர்ப் பலகைக் கல் அவர் வீட்டிலேயே கடந்த 35 ஆண்டுகளாக இருந்தது. வாசகசாலை பக்கத்திலே நான் கல்யாண மண்டபம் கட்டவேண்டும் என்று விரும்பியது உண்மை. வாசகசாலையில் ஒரு பகுதியும் இடிக்கப்பட்டது நடைபெற்ற சம்பவம் ஆகும். ஆனால் கல்யாண மண்டபத்தை மறைக்கிறது என்று சொல்லி காமராஜர் அடிக்கல் நாட்டி கட்டப்பட்ட தொண்டர் ஆறுமுக நாயனார் ஞாபகார்த்த வாசகசாலை இடிக்கப்பட்டது என்று சொல்லுவது வேண்டும் என்றே கதை கட்டுவது ஆகும். புதிய வடிவமைப்பில் வாசக சாலை கட்டுவதற்காக பழைய பழுதடைந்த நிலையில் இருந்த கட்டிடத்தில் ஒரு பகுதி இடிக்கப்பட்டது. தண்டப்பத்து ஊரில் பிறந்த விடுதலைப் போராட்ட வேள்வியிலே குதித்த காங்கிரஸ் தொண்டர் ஆறுமுக நாயனார் தியாகத்தில் கொடிக்காத்த திருப்பூர் குமரனுக்கு ஈடு இணையானவர். காந்தி அடிகள் தொடங்கிய சுதேசி போராட்டத்திற்கு நெல்லை மாவட்டம் முழுவதும் ஊர் ஊராகச் சென்று ஆதரவு திரட்டி இறுதியில் நெல்லையில் நடந்த போராட்டக் களத்திலே போலீசாரின் மிருகத்தனமான குண்டாந்தடியால் தாக்கப்பட்டு பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டு படுகாயம் அடைந்து, கையில் இறுக்கமாக பிடிக்கப்பட்ட காங்கிரஸ் கொடியுடன் வந்தே மாதரம், வந்தே மாதரம், என்று இறுதியாக உச்சரித்து அந்த இடத்திலேயே உயிர் நீத்த தியாகச் செம்மல்தான் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆறுமுக நாயனார்.

1954 ஆம் ஆண்டிலே அவர் நினைவாக ஒரு படிப்பகம் தொடங்க எண்ணிய என் போன்ற இளைஞர்கள் எல்லாம் தொண்டர் ஆறுமுக நாயனார் ஞாபகார்த்த வாசக சாலை சங்கம் என்ற அமைப்பைப் பதிவு செய்தோம். தொடக்கக் காலத்திலிருந்து ஏறத்தாழ 25 ஆண்டுகள் நான்தான் சங்கத்தின் தலைவராக இருந்தேன். இந்த அமைப்பின் மூலமாகத்தான் பண வசூல் செய்து தொண்டர் ஆறுமுக நாயனார் வாசக சாலை கட்டினோம்.

ஆறுமுக நாயனார் வாசகசாலை எங்கள் ஊரில் அருள்மிகு முத்தாரம்மன் கோவில் அருகில் அமைந்துள்ளது. வாசகசாலை அருகே 5 செண்ட் நிலத்தில் திருமண மண்டபம் கட்டப்பட்டு

1990 மே 11] [திரு. கே. பி. கந்தசாமி]

வருகிறது. இந்த 5 செண்ட் நிலத்தையும் ஏறத்தாழ 25 ஆண்டுக்கு முன்பு தனியார் ஒருவரிடமிருந்து நான்தான் கோவில் பெயரில் வாங்கிக் கொடுத்தேன். தற்சமயம் எங்களது குடும்பத்திலுள்ள அறக்கட்டளை சார்பில் திருமண மண்டபம் கட்டி அருள்மிகு முத்தாரம்மன் கோவில் வசம் ஒப்படைக்க இருக்கிறோம். இந்தப் புதிய திருமண மண்டபத்தின் ஒரு பகுதியாக தொண்டர் ஆறுமுக நாயனார் படிப்பகம், அது தவிர ஆறுமுக நாயனார் கலை அரங்கம் அமைக்க ஊரிலுள்ள பெரியவர்கள் முடிவு செய்தனர். காமராஜர் பெயர் பொறித்த கருங்கல் பலகையும் இந்தப் புதிய கட்டிடத்தில் பதிக்கப்படும்.

அந்தச் சம்பவம் பற்றி சிதம்பர நாடார் மகன் ஜெயராமன், அவர் மட்டும்தான் 35 ஆண்டுக் காலமாக தன்னுடைய வீட்டில் இருந்து வருகிற தன்னுடைய தந்தையார் பெயர் பொறித்த கல் பலகையை என்ன செய்வது என்று அறியாது தவறான தகவல்களைத் தந்து என் மீது பழி சுமத்தும் பிரச்சாரத்தைச் செய்து கொண்டு இருக்கிறார். எவருக்கும் நேச்சுரல் ஜஸ்டிஸ் அங்கே மறுக்கப்படவில்லை.

> ‘‘ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு ’’

என்ற வள்ளுவர் வாழ்வியல் இலக்கணத்தை இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே கடைப்பிடித்து இருக்கலாம். நான் இந்த அவையில் இல்லாதபோது என்மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சுமத்தினார்.** இருந்தபோதிலும் எங்கள் பகுதியிலே செய்யப்படுகின்ற தவறான பிரச்சாரத்தை இங்கே சட்டப் பேரவையிலேயும் கிளப்பி அதன் காரணமாக இந்த அவைக்கும், இந்த அவையின் மூலமாக நாட்டுக்கும் தெளிவான விளக்கம் தரக்கூடிய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்தித் தந்த குமரி அனந்தன் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

10-35 மணி

4. அறிவிப்புகள்.

(அ) பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி, தாம் பதவியில் இருந்து ஓய்வுபெற இருப்பதையொட்டிப் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.